செ.வெ.எண்: 13/ஏப்ரல் நாள்: 12.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (12.04.2016), மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் குறித்து நடைபெற்ற அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் பேசுகையில்:

2016 -ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்துத் துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று வாக்காளர் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், விழிப்புணர்வு பேரணிகள், மனிதச் சங்கிலிகள், மணல் சிற்பங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. இப்பணிகளை தேர்தல் வாக்குப்பதிவு நாள் வரை தொடர்ந்து மேற்கொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

மேலும் வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது நமது கடமையாகும். வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை எவ்வித குறைபாடுமின்றி ஏற்படுத்திட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் சிரமமின்றி வாக்களித்திட தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இது தவிர அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வாக்காளர்கள் எவ்வித அச்சமும், தயக்கமுமின்றி வாக்களித்திட வழிவகை செய்திட வேண்டும் என வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு புகைப்படக்கண்காட்சி மற்றும் மின்னணு திரை கொண்ட விளம்பர வாகனத்தின் மூலம் திரையிடப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு படக்காட்சியினையும் பார்வையிட்டு, தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையினையும் பார்வையிட்டு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (பரமக்குடி), வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ராமையா (முதுகுளத்தூர்) உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**